(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 80.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 செப்தெம்பர் 10, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

15/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்திக்கு வழங்கியுள்ள பங்களிப்பு, சதவீத அடிப்படையில் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) தற்போதுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தொடர்பில் செயற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்கொள்ளும் பணிப்பொறுப்புக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

117/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iii) ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1253/2025

கௌரவ மஞ்ஜுளா சுரவீர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(ii) அத்தகைய காணிகளுக்கென தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(iii) அவ்வாறு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரின் பெயர், வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு, காணி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படை மற்றும் வழங்கப்பட்ட காலப் பகுதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பட்டியலில் அரசியல்வாதிகளின் பெயர்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த அரசியல்வாதிகள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1254/2025

கௌரவ ஈ.எம்.பஸ்நாயக,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டபோது, அந்த ஆணைக்குழுவிற்கு கண்டி மாவட்டத்திலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் சட்டரீதியாக குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளின் அளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உரிய முறையில் வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு குறித்த காணிகளில் சட்டரீதியற்ற வகையில் காணியை உபயோகப்படுத்துகின்ற நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) இந்நபர்களுக்கு/நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1255/2025

கௌரவ லசித் பாஷண கமகே,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், அமுல்படுத்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவு, ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, நிறைவு செய்யப்பட்ட ஆண்டு, செலவிடப்பட்ட தொகை மற்றும் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாது;

(iii) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், செலவிடப்பட்ட தொகை மற்றும் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாது;

(v) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 123 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டிய நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணத்திலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெற்றுக்கொண்ட ஏதேனும் கடன் தொகையில் இருந்து பதின்மூன்று பில்லியன் இருநூற்று எண்பத்தைந்து மில்லியன் அறுநூறு ஆயிரம் ரூபாய்க்கு (ரூபா. 13,285,600,000) விஞ்சாத மேலதிக தொகையை செலுத்த வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்பு** | 123 - | நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் | | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | 02 - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| | | மூலதனச் செலவினம் | ரூ. | 13,285,600,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **13,285,600,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*4.
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 171 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திடம் உள்ள வேறு ஏதேனும் நிதியம் அல்லது நிதிகளிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பப்படி அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஆயிரத்து ஐநூறு மில்லியன் ரூபாயினை (ரூபா 1,500,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

**தலைப்பு** **171** - மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**நிகழ்ச்சித்திட்டம்** **02** - அபிவிருத்தி நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ரூ. | 1,500,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **1,500,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 13,285,600,000 ஆகும்.

*5.
தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.
தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.
மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.
தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — குழு ஆய்நிலை.

*9.
பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**